## 1. தேசிய வருமானமும் பொருளாதார வளர்ச்சியும்

உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதார வளர்ச்சி 1999இன் 4.3 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 6.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

- ▲ இது, 2000 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட 4.7 சதவீதமான வளர்ச்சி மற்றும் உலக வர்த்தகத்தில் ஏற்பட்ட 12.5 சதவீதமான விரிவாக்கம் என்பனவற்றினால் எய்தப்பெற்ற முன்னேற்றம் கண்ட வெளிநாட்டுப் பொருளாதார சூழலுக்கு ஏற்ப இலங்கையின் பொருளாதாரம் சாதகமான முறையில் பதிலிறுத்தமையின் விளைவாகும்.
- ▲ வளர்ச்சி, அனைத்து முக்கிய துறைகளிலும் பதிவு செய்யப்பட்டதெனினும் முக்கியமாக ஏற்றுமதி சார்ந்த வேளாண்மை, தயாரிப்புத்துறைகள் மற்றும் வர்த்தகம், போக்குவரத்து மற்றும் வசதிகள் போன்றவற்றில் குறிப்பிடத்தக்களவிற்கு காணப்பட்டது.
- ▲ மொ.உ.உற்பத்தியில் பணிகள்துறை மிகப்பெரும் பங்கிற்கு வகை கூறிய வேளையில் அதனைத் தொடர்ந்து வேளாண்மை மற்றும் தயாரிப்புத் துறைகள் காணப்பட்டன.
- ▲ உலகப் பொருளாதாரத்தில் எறிவு செய்யப்பட்ட மெதுவானபோக்கு, தாமதமடைந்த பருவக்காற்றின் பாதகமான தாக்கம், தற்காலிகமாக உயர்ந்த வட்டி வீதங்கள் என்பன காணப்பட்டபோதும் 2001 ஆம் ஆண்டில் பொருளாதாரம் 4.5 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொ. உ. உ. வளர்ச்சி




வரைபடம் 1.1

2000 ஆம் ஆண்டில் மொ. உ. உற்பத்திக்கு துறைவாரியான பங்களிப்பு




வரைபடம் 1.2